ஶ்ரீ:



ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ஶ்ரீமதே கூரேஶாயநம:
ஶ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஶ்ரீமத் வரவர முநயே நம:
ஶ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஶ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

**ஶ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை**




# ஸ்வாமி முதலியாண்டான் வைபவம்

**ஶ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்**

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

## **வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ. குமார ராமாநுஜாசார்யர்**



### **வர்த்தமான ஸ்வாமி தனியன்**

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீஶைல தேஶிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஶ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||


| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>Singaperumal Koil,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>Srirangam, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>Kancheepuram,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Thirunarayanapuram,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>Srivilliputhur,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>Kooram10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |

**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான் பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் **அண்ணங்கராசார்ய ஸ்வாமி** தொகுத்தருளிய

# ஸ்வாமி முதலியாண்டான் வைபவம்

நாச்சியாரம்மை என்றும் தாமரையாளம்மை என்றும் ஸ்வாமி எம்பெருமானாருக்கு ஸஹோதரிகள் இருவர் – அவர்களுள் மூத்தவருடைய திருக்குமார்ர் முதலியாண்டான். பச்சை வாரணப் பெருமாள் கோவிலில் சித்திரை மாதப் புனர்வசு நன்னாளில் தோன்றியவர். பண்டு த்ரேதாயுகத்தில் ராமாவதாரத்தில் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீராமனாகவும், ஆதிசேஷன் லக்ஷ்மணனாகவும் அவத்ரித்திருந்து, பெருமாள் இளைய பெருமாளிடம் ஒழிவில் காலமெல்லாம் வழுவில்லாத அடிமைகளைக் கொண்டு போந்தமை ப்ரஸித்தம். அந்த அவதாரத்தில் ஒரு பரமார்த்தம் பெருமாளுடைய திருவுள்ளத்தில் பட்டது; வகுத்த விஷயத்தில் அடிமை செய்வது ரஸமேயல்லது அடிமை கொள்வது நலமன்று என்று பட்ட்து. அதனால், அந்த ஆதிசேஷனை சேஷியாக வைத்துத் தான் சேஷபூதனாகவிருந்து அடிமை செய்து களிக்க்க் காதல் கொண்டு த்வாபர யுகத்தில் அந்த ஆதிசேஷனை நம்பி மூத்தபிரானென்கிற பலராமனாக முன் தோன்றலாய்த் திருவவதரிப்பித்துத்தான் “பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்” என்று ஆண்டாள் அருளிச்செய்தபடி அவன் தம்பியான க்ருஷ்ணனாகத் தோன்றி, பலராமனுக்கு சேஷித்வத்தையும் காட்டி நின்றவிடத்திலும், செய்து போந்த அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே தனக்கு சேஷித்வமே உலகறிய நின்றபடியால் அக்குறை தீர மீண்டும் ஒரு அவதாரம் செய்யத் திர்வுள்ளங்கொண்டு தம்பியான இளையபெருமாள் இக்கலியுகத்தில் இளையாழ்வார் என்கிற ஸ்வாமியாகவும், தான்

தாசரதியெங்கிற நிஜ நாமத்துடனே முதலியாண்டானாகவும் திருவ்வத்ரிக்க்லாயிற்று.

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

என்பது இவ்வாசிரியருடைய தனியனாதலால் ஶ்ரீராமாநுஜ பாதுகா என்றே இவர் வழங்கப்பெற்று வந்தார். எம்பாருக்கு ராமாநுஜ பதச்சாயை யென்கிற ப்ரஸித்தி போலே இவருக்கு ராமாநுஜ பாதுகை யென்கிற ப்ரஸித்தி நிகழ்ந்தது.

ஸ்வாமி எம்பெருமானார் ஆச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு தென்னத்தியூரர் கழலிணைக் கீழே வாழ்ந்தருளுங் காலத்தில் கூரத்தாழ்வானோடு கூட இவரும் ஸ்வாமியை ஆச்ரயித்து வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை அதிகரித்து நல்விரகராயிருந்தார். திருத்தகப்பனாரான வாதூல குல திலக அநந்த நாராயண தீக்ஷிதரிடத்திலேயே ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் திவ்ய ப்ரபந்தங்களையும் அதிகரித்திருந்த படியாலே ஸ்வாமியின் அபிமானத்திற்கு ஆழ்வானைப் போலவே இவரும் இலக்காயிருந்தார். ஸ்வாமி இவ்விருவரையும் தண்டும் பவித்திரமுமாகத் திருவுள்ளம் பற்றியிருந்த்து.

“லௌகிகே ஸமயாசரே க்ருதகல்போ விசாரத:” என்று ஶ்ரீராமபிரானைப் பற்றி ஶ்ரீராமாயணத்திற் கூறியதுபோல, ஸ்வாமியின் சிஷ்ய வர்க்கங்களுள் இவர் லௌகிக சாமர்த்தியமும் சிறப்புறப் பொருந்தி யிருந்ததினால் ஶ்ரீரங்கநாத திவ்யாலய கைங்கர்ய நிர்வாஹண துரந்தரத்வம் இவருக்குப் ப்ராப்தமாயிற்று.

ஸேனை முதலியார் போலவிருந்து அரங்கன் கைங்கர்யத்தை ஆண்டு வந்த படியினாலேயே இவர்க்கு முதலியாண்டானென்று திருநாமமாயிற்றென்பர் பெரியோர்.

கோயிலொழுகில் இவரைப் பற்றின ப்ரஸ்தாவத்தில் “முதலியாண்டானும் குறட்டிலேயிருந்து கோயில் கார்யத்தையும், உள்ளே கருவுலக வாசலிலேயிருந்து திருமேனி யுபசாரத்தையும், ஸன்னிதியிலே யிருந்து திருப்பவள உபசாரங்களையும் உடையவர் நியமனப்படி ஆராய்ந்து கொண்டு அனைத்தழுகும் கண்டருளப் பண்ணிக் கொண்டிருந்தார்” என்றுள்ளது.

திருவாய்மொழி ஈட்டில் (2.9.2) ஞானக் கை தா என்றவிட்த்தில் “எம்பாருக்கு ஆண்டானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது; அதாவது – ஒரு கிணற்றில் விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால் எடுக்கும்வர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாய்ருக்குமிறே; அப்படியேயாகிறது என்று” என்கிற ஐதிஹ்ய ஸ்ரீஸூக்தியுள்ளது. இதன் விவரணம் வருமாறு: முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத்தில் எழுந்தருளி இருக்கையில் அவருடைய சிஷ்யரான்வொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் ஸன்னிதியிலே கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போதொரு நாள் சில ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு எம்பார் திருவிலச்சினை ஸாதிக்க விருக்கையில் இந்த ஸ்ரீவைஷ்ணவரும் தமக்கும் (சக்ராங்கனம்) ஸாதிக்கும்படி வேண்டினார். அப்போது எம்பார் ‘உமக்கு விசேஷ ஸம்பந்தமே ஸம்பந்தம்’ என்று அவர் விண்ணப்பம் செய்ய அவ்வள்விலே எம்பார் இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவரென்று அறியாதே இவருக்கும் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக் கொண்டு கைங்கர்யங்களும் கொண்டு எழுந்தருளியிரா நிற்கையில் ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே எழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டானை வந்து சேவிக்க, ஆண்டானும் முன்பு போலே இவரைக் கொண்டு வேண்டும் கைங்கர்யங்களைக் கொள்ல, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே யெழுந்தருளி, கனக்க அபசாரப்பட்டேன் என்றருளிச் செய்ய, இவருடைய திருவுள்ளத்தின் க்லேசத்தையறிந்து அப்போது ஆண்டானருளிச் செய்த வார்த்தை – “ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே, அப்படியேயாகிறது” என்று. ஸம்ஸார

ஸாகரத்திலே அழுந்தினவனுக்கு அடியேனும் கைகொடுத்து தேவரீரும் கை கொடுத்தால் என்ன குறை? தேவரீர் தவறாக ஒன்றும் செய்து விடவைல்லையே; எதற்காக க்லேசிப்பது? என்பது முதலியாண்டானுடைய பரமோதார மதுரமான திருவாக்கு, (கை கொடுப்பதாவது – ஞானக்கை கொடுப்பது).

முதலியாண்டான் பணித்த வார்த்தைகளென்று அரியனவாக்ச் சில காண்கின்றன. ஸ்ரீராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம் போலே சில வார்த்தைகள் அருளிச் செய்தாராம்; அவையாவன –

1. பிராட்டிக்குச் சிறை இருப்புப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரத்தில் இருப்பு.
2. பிராட்டி இளைய பெருமாள் விஷயத்தில் அபசாரப்பட்டு பெருமாளைப் பிரிய நேர்ந்தது போலே, சேதனர்களுக்குப் பாகவதாபசாரம் எம்பெருமான் திருவடி ஸ்ம்பந்த்த்தை விலகப் பண்ணும்.
3. பிராட்டிக்கு அசோகவனம் போலே இவர்களுக்கு ப்ரக்ருதி ஸம்பந்த ரூபமான தேஹம்.
4. பிராட்டிக்கு அரக்கிகளின் ஸஹவாஸம் போலே இவர்களுக்கு புத்ரகளத்ராதிகளின் ஸஹவாஸம்.
5. பிராட்டிக்கு மாரீச மாயா ம்ருக்க் காட்சிபோலே இவர்களுக்கு “பாவியேனைப் பல நீ காட்டிப்படுப்பாயோ” என்னும்படியான விஷயங்களின் காட்சி.
6. பிராட்டிக்குத் திருவடி நேர்பட்டாப் போலே இவர்களுக்கு ஆசார்யன் நேர்படுவது.
7. பிராட்டிக்குத் திருவடி சொன்ன ஸ்ரீராமகுணங்கள் போலே இவர்களுக்கு ஆசார்யன் உபதேசிக்கும் பகவத் விஷயாதிகள்.
8. பிராட்டிக்குத் திருவடி அடையாளங்கள் கூறித் திருவாழி மோதிரம் கொடுத்தது போலே, இவர்களுக்கும் குருபரம்ப்ரா பூர்வகமான திருமந்த்ரோபதேசம்.
9. பிராட்டி திருவடிக்குச் சூடாமணி கொடுத்தாப் போலே இவர்கள் ஆசார்யன் விஷயத்தில் “தலையல்லால் கைம்மாறிலேனே” என்றிருக்கும் இருப்பு.

10. பிராட்டிக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானது திருமகளாருடைய ஸஹவாஸமும் பேச்சும் தாரகமாய் இருந்த்துபோலே, இவர்களுக்கு பாகவத ஸஹவாஸமும் அவர்களுடைய திவ்ய ஸூக்திகளுமே தாரகமாய் இருக்கும்.

11. பெருமாள் பிராட்டி இருந்த விடத்தே வந்து விரோதிகளைக் கிழங்கெடுத்து அவளைக் கைக்கொண்டது போலே, எம்பெருமான் "ஆவாரார் துணையென்று அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாய்போல் பிற்விக்கடலுள் நின்று துளங்கு" மிவர்களிட்த்தேற வந்து "பொய்ந் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு" மாகிற விரோதிகளை வேரோடே களைந்து நித்ய முக்தர்களோடே ஒரு கோவையாக்கும்படி கைக்கொண்டுள்ளது... இங்ஙனே பல பொருள்களுள.

**ஸ்ரீ வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**